# மின்நிலா

**மார்ச் 8, 2021**



**யாருடைய விக் த ? அ?**

**மின்நிலா 042**

## எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ... இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.**

**Layout by : KGG**

**============**

**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**

**மின்நிலா 041 ((முந்தைய இதழ் சுட்டி)**

**மின்நிலா பொங்கல் மலர் 2021 சுட்டி**

**மின்நிலா தீபாவளி மலர் 2020 சுட்டி**

மின்நிலா பத்திரிக்கைக்கு உங்கள் படைப்புகளை engalblog@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்புங்க.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| தக்காளி சாதம் - கீதா சாம்பசிவம் ரெஸிப்பி | 3 |
| **கதை : குழந்தையும் தெய்வமும் - வானம்பாடி** | 12 |
| கேள்வி பதில்கள் | 18 |
| எங்கள் ஆசிரியர்கள் மின்னூல்கள் | 24 |
| கதம்பம் : ஸ்ரீராம் | 26 |
| படம், பாட்டு, தகவல் & காணொளி :: ஸ்ரீராம் | 37 |
| **நல்ல செய்திகள்** | 41 |
| **பேசும் படங்கள்** :: kayjees | 52 |

# தக்காளி சாதம் - கீதா சாம்பசிவம் ரெஸிப்பி

**தக்காளி சாதம். ராகேஷ் ரகுநாதன் செய்முறையில். ஒரு சில மாற்றங்கள் உண்டு.**

**பொதுவாகத் தக்காளி சாதம் நான் எப்படிப் பண்ணி இருக்கேன் எனில் வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் வதக்கிக் கொண்டு அதில் சாம்பார்ப் பொடி, உப்புச் சேர்த்துக் கொத்துமல்லி, புதினா இலைகளைச் சேர்த்துச் சமைத்த சாதத்தில் இந்த தக்காளி மசாலாவுக்குத் தேவையானதைப் போட்டுக் கலந்து விடுவேன்.**

**இன்னொரு முறையில் தக்காளியை மட்டும் வதக்கிக் கொண்டு அதற்குப் பச்சை மிளகாய், காரப்பொடி, தனியாப் பொடி சேர்த்துக் கொஞ்சம் போல் கரம் மசாலா அல்லது ஏலக்காய், கிராம்பு தாளித்துக் கொண்டும் பண்ணி இருக்கேன். இதிலும் கொத்துமல்லி, புதினா இலைகள் சேர்ப்பேன். பல ஆண்டுகள் முன்னர் என் மாமி தேங்காய்ப் பாலும், தக்காளி+வெங்காயம்+பூண்டை அரைத்துக் கொண்ட மசாலாவை நன்கு வதக்கியும் தேவைப்பட்ட மசாலா சாமான்கள் தாளிதத்தில் சேர்த்து பாஸ்மதி அரிசியை ஊற வைத்து அதில் சேர்த்து உப்புச் சேர்த்துக் குக்கரில் வைத்திருந்தார். அதுவும் நன்றாக இருந்தது. ஆனாலும் நான் அப்படிப் பண்ணவே இல்லை. இப்போ சமீபத்தில் நம்ம ரங்க்ஸ் ராகேஷ் ரகுநாதனின் வீடியோவைப் பார்த்துட்டு இந்த மாதிரித் தக்காளிச் சாதம் ஒரு நாள் பண்ணு என்றார்.**

**சரினு நேற்றுப் பண்ணினேன். அதற்குத் தேவையான பொருட்கள்.**

**பாஸ்மதி அரிசி ஒரு கிண்ணம் சுமார் 200 கிராம்**

தக்காளி இரண்டை எடுத்துக் கழுவி அதன் கண்ணை எடுத்துவிட்டுப்பின்னர் வெந்நீரில் ப்ளாஞ்சிங் செய்து வைக்கவும். சிறிது நேரம் கழித்து தோலை உரித்துக் கொண்டு தக்காளியை மிக்சி ஜாரில் போட்டு நன்கு அடித்துச் சாறாக எடுத்து வைத்துக்கொள்ளவும். ஒன்றிரண்டு தக்காளித்துண்டுகள் மசியலைனாப் பரவாயில்லை. எடுத்த தக்காளிச் சாறு கீழுள்ள படத்தில்



தேங்காய்ப் பால் எடுத்துக் கொள்ள வேண்டும். பாஸ்மதி அரிசி ரொம்பவும தண்ணீர் தாங்காது என்பதால் ஒரு கிண்ணத்துக்குள்ளாகத் தேங்காய்ப் பால் இருக்கட்டும். ஆதலால் தேங்காய் கொஞ்சமாகவே இருக்கட்டும். நான் சின்னதாக ஒரு பாதி மூடி எடுத்துக் கொண்டேன்.



வெங்காயம் ஒன்று நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாய்.

இங்கே ஒரு வெங்காயம் நறுக்கி வைச்சிருக்கேன். தேங்காய்ப் பால் எடுக்கத் தேங்காய், நறுக்கிய பச்சை மிளகாய், ப்ளாஞ்சிங் செய்திருக்கும் தக்காளிகள், பாத்திரத்தில் ஊறும் அரிசி ஆகியவை மேலே காணலாம்.

இஞ்சி தேவையானால் ஒரு சின்னத் துண்டு. பூண்டு சேர்ப்பவர்கள் இஞ்சியையும், பூண்டையும் சிதைத்துக் கொள்ளவும். \

கொத்துமல்லி, புதினா இலைகள் பொடியாக நறுக்கியது வகைக்கு ஒரு மேஜைக்கரண்டி. என்னிடம் புதினா இல்லை என்பதால் கொத்துமல்லி மட்டும் கடைசியில் தூவினேன். வதக்கும்போது சேர்க்கலை.

தாளிக்க எண்ணெயும் நெய்யுமாக ஒரு மேஜைக்கரண்டி

ஏலக்காய், கிராம்பு, லவங்கப்பட்டை, தேஜ்பத்தா என்னும் மசாலா இலை. இதில் கிராம்பு ராகேஷ் சேர்க்கலை. அதே போல் சோம்பு, ஜீரகமும் சேர்க்கலை. நான் இவை சேர்த்தேன். பச்சை மிளகாயையும் இஞ்சியையும் போட்டு வதக்கிக் கொண்டு வெங்காயத்தைப் போட்டு வதக்கினேன்.

மிளகாய்த் தூள் கால் தேக்கரண்டி(காரமாக இருப்பதால் கொஞ்சமாகப் போட்டேன்._

ஒரு தேக்கரண்டி தனியாப் பொடி

அரைத்தேக்கரண்டி மஞ்சச்ள் பொடி (கரம் மசாலாப் பொடி தேவையானால் சேர்க்கலாம். நான் சேர்க்கலை) கொத்துமல்லி, புதினா இலைகளை வெங்காயம் வதக்கினதும் சேர்க்கிறாங்க. அது உங்களுக்குப் பிடித்தால் சேர்க்கலாம். நான் சேர்க்கலை. வெங்காயம் வதங்கியதும் தக்காளிச் சாறைச் சேர்த்தேன். அதில் மிளகாய்ப் பொடி, மஞ்சள் பொடி, தனியாப் பொடி சேர்த்துத் தக்காளி ப்யூரியை நன்கு சுண்டும்படி கொதிக்க விட்டேன். கொதித்துச் சேர்ந்து வரும்போது மேலே எண்ணெய் பிரியும்.





**சுண்ட வைச்ச தக்காளி ப்யூரி கலவை**



**ஊற வைத்த அரிசியோடு காய்ந்த பட்டாணி ஊற வைச்சு அரைவேக்காடாக எடுத்துச் சேர்த்து வைச்சிருக்கேன்.**



**மேலே சொன்ன கலவையில் ஒரு கிண்ணம் தேங்காய்ப் பால் சேர்த்தது மேலே காணும் படத்தில்**



வதக்கிய தக்காளிச் சாறுக் கலவையைத் தேங்காய்ப் பால்+பட்டாணீ+அரிசி சேர்த்த கலவையில் போட்டு ஒரு தரம் நன்கு கலந்து விட்டு ) அரிசி உடையக் கூடாது) உப்புத் தேவையானதை சேர்த்து ஒரு கொதி வந்ததும் குக்கரை மூடி வெயிட் போட்டேன். ஒரே ஒரு விசில் வந்ததும் அடுப்பை அணைத்தேன். குக்கர் திறக்க வந்ததும் சாதம் தயார். மேலே கொத்துமல்லிதூவி விட்டு வெங்காயப் பச்சடி,காரட் சாலட் ஆகியவற்றோடு சாப்பிட்டோம்.



**வெந்த சாதம் குக்கரில். பாஸ்மதி அரிசியை குறைந்தது அரை மணி நேரமாவது ஊற வைத்துவிட்டுப் பின்னர் சமைத்தால் அரிசி நீளமாகவும், மிருதுவாகவும் வேகும்.பொதுவாக வெந்நீர் கொதிக்கவிட்டு ஒரு கிண்ணம் சேர்ப்பது உண்டு. ஆனால் இதில் தேங்காய்ப் பால் சேர்ப்பதால் ஒரு கொதி விட்ட பின்னர் குக்கரை மூடுகிறோம். சாதம் மிருதுவாகவே இருக்கும்.**

இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க: **சுட்டி**

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக**

# கதை : குழந்தையும் தெய்வமும் - வானம்பாடி

எங்கள் தளத்தில் இன்று ஒரு புதிய எழுத்தாளர் அறிமுகம்! நமக்குதான் புதியவர். 2005 லிருந்து பதிவுலகில் இருக்கும் வானம்பாடி வானம்பாடி எனும் பெயரிலேயே வலைத்தளம் வைத்திருக்கிறார். சமீப காலங்களில் கீதா அக்கா பதிவுகளில் அவர் பெயர் பார்த்து, அவர் தளம் சென்று என்று அறிமுகமானவர். சமீப காலங்களில் நம் தளத்துக்கும் வருகை தந்து கொண்டிருக்கும் அவரை வரவேற்கிறோம். கவிதையும் அழகாக எழுதுகிறார். இனி அவரிடமிருந்தும் அவ்வப்போது படைப்புகளை தொடர்ந்து எதிர்பார்க்கலாம் என்று நம்புகிறோம்.

<u>குழந்தையும், தெய்வமும்</u>



எங்கள் வீட்டிற்கு தினமும் சிறிது நேரம் வந்து செல்லத் தொடங்கினாள் தயஸ்ரீ.

ஏனோ அவளுக்கு என்னைப் பார்த்தால் மிகவும் பிடித்து விடுகிறது. என்னவர் என்னை ராஜிமா என்றே அன்புடன் அழைப்பார். அதைப்போலவே, என் பெயருடன் அம்மா சேர்த்து "ராஜிம்மா "

என்றே அழைக்கிறாள்! அம்மா என்று அவள் மழலையில் அழைக்கும் பொழுது நெகிழ்ந்து போகின்றேன்.

தயஶ்ரீயின் குடும்பம் இரண்டு வருடங்களுக்கு முன்பு தான் எங்கள் பக்கத்து வீட்டிற்கு குடி வந்தனர். நான் பள்ளிக்கு கிளம்பும் முன் டாடா சொல்ல வந்து விடுவாள். பின் பள்ளி முடிந்து வீடு திரும்பி கதவை திறக்கும் முன்பே வந்து காத்திருப்பாள். 'எனக்கும் கொஞ்சம் காபி குடுங்க ராஜிம்மா' என்பாள். எனக்கு பள்ளி விடுமுறை நாள் என்றால் அவளுக்குத் தான் சந்தோஷமே! தோட்டத்து செடிகளுக்கு என்னுடன் நீரூற்றுவாள். குளித்து முடித்து வந்து என்னிடமே தலை பின்னிக் கொள்ள வருவாள். ஞாயிற்றுக் கிழமை அவளுக்காகவே அடை செய்து விடுகிறேன் இப்பொழுதெல்லாம். அவள் அம்மா ஊட்டி விட்டால் அடம் பிடிப்பாள். நான் ஊட்டினால் சமத்தாக சாப்பிட்டு விடுவாள். என் புடவை நுனி பிடித்து நடக்க நான் மயங்கித்தான் போகிறேன்.

அவளுக்கு கதை கேட்கப் பிடிக்கும். குட்டி கதைகள் சொல்ல என்னவருக்கு மிகப் பிடிக்கும். வளமையான காடுகளும், அரண்மனைகளும், குடில்களும்,வயல்வெளிகளும் , கம்பீரமான யானைகளும், சிங்கங்களும், மானும், வேடனும் ,தந்திரக்கார நரியும், அணிலும், நன்றியுள்ள நாயும், பூனையும் , எளிமையான குடியானவரும், நல்ல பண்புடைய ராஜாக்களும், சித்திர குள்ளர்களும் , புத்திசாலியான ராணிகளும் , குறும்பு கொப்பளிக்கும் சிறுவர்களும் ,சிறுமியரும் அவருடைய கதைகளில் அழகாய் பவனி வருவார்கள். இவரிடமும் ஒரு நல்ல கதை சொல்லி இருப்பார் என அறிந்ததில்லை. செல்லம் கொஞ்சி "எனக்கு கத சொல்லுங்க மாமா" என்பாள். கதைகளில் சஞ்சரித்து , "ம்" கொட்டிக் கொண்டு, அவள் தூங்கிய பின் பூப்போல தாங்கி அவள் வீட்டில் விட்டு வருவேன்.

போகிற போக்கில் விளையாட்டாய் , நாங்கள் காணாத சந்தோஷத்தை வாரி இறைத்தாள் என்றே

சொல்ல வேண்டும். வறண்டு கிடந்த இடத்தில் சிறு ஊற்றைப் போல தோன்றி, பெருகி மகிழ்ச்சியாய் பொங்கினாள் எங்கள் வாழ்வில்.

இவ்வளவு என்னிடம் எப்படி பழகினாள் என்று எனக்கே தெரியவில்லை. அவளுடைய அம்மா வித்யாவும் மிகுந்த பாசமாகவே பேசுகிறாள். அவள் கருவுற்றிருப்பதால் என்னிடம் தயஸ்ரீ இருப்பது பாதுகாப்பாகவும், தன் வேலைகளை செய்து கொள்ள வசதியாகவும் இருப்பதாய் சொல்வாள். கடந்த ஆண்டு பெரும் நோய்த்தொற்றின் பொருட்டு சில மாதங்கள் வீட்டில் தனியாக இருந்த பொழுது, மிகப்பெரிய ஆறுதலாக இருந்தாள்.

அவள் கேட்கும் கேள்விகளுக்கு சலிக்காமல் பதில் சொல்வார் என்னவர். "எதுக்கு உம்மாச்சி கண்ண குத்துது?" என்பாள் . "மேகம் எல்லாம் எங்க போகுது?" என்பாள். சில சமயம் ரொம்பவும் வானவியல் ஆராய்ச்சி செய்து ,"ஏலியன் இங்க வண்டுச்சுனா , நா அது கூட ஸ்பேஸ் கு போவேனே !" என்பாள். "எனக்கு இப்பவே ராஜிம்மா கூட ஸ்கூல் போகணும்" என்பாள். "என் பத்துடே கு புடு டெஸ் வேணும்" என்பாள்.

எங்கள் மொழியும் கொஞ்சம் கொஞ்சம் பேசப் பழகிவிட்டாள். இறுகிய எங்கள் மனத்திற்கு இதமளித்தாள் .எனக்கும் அவருக்கும் சிறிது பயமாக கூட இருந்தது. நான் வீட்டின் வெறுமை பிடிக்காமல் பள்ளிக்கு வேலைக்கு செல்லத் தொடங்கி ஆறு வருடம் ஆகிறது. இப்பொழுது இருக்கும் வீடு சொந்த வீடென்றாலும், பள்ளி வெகு தூரம் செல்ல வேண்டியதாய் இருந்தது.

என் பள்ளிக்கு அருகிலேயே நாங்கள் வீடு பார்த்துக் கொண்டிருந்தோம். வீடு கிடைத்தபாடில்லை. அவர் என்னைப் பற்றி நன்கு அறிந்ததால் இப்பொழுது மும்முரமாக வீடு பார்க்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார் . குழந்தைக்காய் நான் ஏங்கிய ஏக்கம் கொஞ்சமில்லை. செல்லாத கோவிலில்லை , வேண்டாத

தெய்வமில்லை. பார்க்காத வைத்தியமில்லை. உடலும், மனமும் ரணமாகி போனது தான் மிச்சம். ஆகிவிட்டது வருடங்கள் பன்னிரண்டு. இதற்கிடையே, ஊருக்கு சென்றால், சொந்தங்களின் கேள்விகளும், தேவையில்லாத அறிவுரைகளும். எங்கும் விசேஷத்திற்கும் செல்வதில்லை. பிறரின் ஆதங்கமும், பரிகாசமும் என்னை மென்மேலும் வாட்டுவதால் சொந்த ஊருக்கு செல்வதையே நிறுத்தி விட்டோம். எப்பொழுதாவது பெற்றோர் வந்து செல்வதுண்டு.

நேற்று தான் என்னவர் , பள்ளிக்கு பக்கத்திலேயே தனது நண்பரின் அபார்ட்மெண்ட் வீடு காலியாவதாக சொல்லியிருந்தார். இன்று தயஸ்ரீயின் நான்காவது பிறந்தநாள் என்று அவள் அம்மா அழைத்திருக்கிறாள். இன்று காலை 10 மணிக்கு வீடு பார்க்கச் சென்றோம். இருவருக்கும் பிடித்திருந்ததால் அட்வான்ஸ் கொடுத்து விட்டும் வந்து விட்டோம் .

மனம் தான் நிலை கொள்ளவில்லை. வரும் வழியில், "Grasp" துணிக்கடைக்கு சென்று வெள்ளை நிறத்தில் மஞ்சள் பூக்கள் எம்பிராய்டரி செய்த frock ஒன்றும் அதற்கு ஏற்றார் போல அழகிய கிலிப்சும் , ஹேர்பேண்ட் வாங்கிக் கொண்டோம்.

அன்பிற்கு எல்லை இல்லை தானே ...பகை தானே கொல்லும் ? எனக்கோ அன்பென்னும் அமுது சிறிது சிறிதாக மிகுந்து , நஞ்சாகி விடுமோ என பயமுறுத்துகிறது.

இன்று மாலை நடைபெற்ற பிறந்த நாள் விழாவில், அவள் அம்மாவிற்கு கேக் ஊட்டிவிட்டவள், என்ன நினைத்தாளோ, ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்து, முத்தமிட்டு , எனக்கும் கேக் ஊட்டிவிட்டாள். அவள் தாத்தா, பாட்டி எங்களை ஆசிர்வதித்தனர்.

## மின்நிலா 042



## மின்நிலா 042

அவளிடம் விளையாடிவிட்டு ஒன்பது மணிக்கு மேல் தான் வீடு திரும்பினோம். இரவு வெகு நேரம் உறக்கம் வரவில்லை.

இந்த அன்பும் ரயில் சிநேகம் போலத்தானோ?, என மனதில் குமைந்து கொண்டு வெறுமனே கண் மூடி படுத்திருந்தேன். கானல் நீராகி விடுமோ இதுவும் வீடு மாறினால்? என நினைத்து தவித்தேன். எத்தனையோ முறை, என்னவரிடம் ஒரு குழந்தையை தத்து எடுத்துக் கொள்வோம் என்று சொல்லி இருக்கிறேன்.

மௌனம் மட்டுமே சாதிப்பார். ஆனால் இப்போது தூங்கியிருப்பார் என நினைத்த என்னவர் , எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினார். இதோ இந்த நொடி,விடியப்போகும் இவ்வேளையில், முதல் முறையாக ஒரு குழந்தையை தத்தெடுத்துக் கொள்வோமா ? என அவரே சொல்ல கேட்கிறேன். சொல்ல வார்த்தை வரவில்லை.நெகிழ்ச்சியில் கண்ணீர் மட்டுமே வருகிறது . இந்த வீட்டிலேயே இருப்போம். தயஸ்ரீக்கு துணையாய் இன்னொரு குழந்தையை உன் விருப்பம் போல வளர்ப்போம் என்றும் சொல்கிறார் !

ஆழமாக கண்கள் நோக்கி, தோள் சாய்ந்து கொள்கிறேன்! ஆதுரமாய் தலை கோதி புன்னகைக்கிறார் நிஜமாய்! இன்று குழந்தையும், தெய்வமும் ஒன்றாக கூடி என்னிடம் வந்தது போல் உணர்ந்தேன். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்று கேள்விப்பட்டுள்ளேன்.இன்று கண்ணார கண்டு விட்டேன். கரைத்தே விட்டாள் அவர் மனதை! என்னவரின் மனதை இளக்கி, தெளிய வைத்த தயஸ்ரீக்கு நன்றி சொல்ல வேண்டும் நாளை!

இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக

# கேள்வி பதில்கள்

**நெல்லைத்தமிழன் :**

**1. அரசு பேருந்தில் முதல் இருக்கை, எம்.பி, எம்.எல்.ஏக்களுக்கு ஒதுக்கியிருப்பாங்க. அவங்கள்லாம் அரசுப் பேருந்தில் போவாங்கன்னு அரசு நம்பிக்கிட்டிருக்குதா?**

**# 1950 களில் வந்த ஆணை. அப்போது பயன்படுத்தப் பட்டதை அறிவேன். இப்போது நிலவரம் இது தேவையில்லை என்பதே.**

**& கடைசி நிமிடத்தில் முன்பதிவு செய்பவர்களுக்கு அந்த இருக்கை கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.**

**2. இவங்க நல்ல காடரிங் பண்ணறாங்க (திருமணம் போன்ற விசேஷத்துக்கு) என்று யார் யாரை நீங்க சிபாரிசு செய்வீங்க?**

**# ஆளாளுக்கு மாறுபடும் அளவீடுகள். நம் தேடல் குறைந்த செலவில் நல்ல உணவா , ஆடம்பரமான சூழலில் நல்ல உணவா என்பது முதலில் தெரிய வேண்டும். மேலும் எத்தனை தலைகள் என்பதும் முக்கியம்.**

**& எனக்குத் தெரிந்து சென்னையில் எங்கள் ஆஸ்தான caterer ஒருவர் இருக்கிறார். Mahalakshmi Catering Services - Nagarajan. Keelkattalai - Chennai 600117. எங்கள் குடும்ப கல்யாணங்கள் எல்லாவற்றுக்கும் சிறப்பான catering செய்தார்.**

**3. பசிக்குது, டக்குனு பண்ணிச் சாப்பிடணும்னா நீங்க என்ன பண்ணுவீங்க?**

**# உப்புமா, கேழ்வரகு அல்லது அரிசி நொய் கஞ்சி.**

& வீட்டில் நிறைய ready made mix பொடிகள் இருக்கும். அப்போதைய விருப்பத்திற்கேற்ப ரவா தோசை, கைக்குக் கிடைத்த மாவுகளை எல்லாம் ஒவ்வொரு ஸ்பூன் போட்டு மாவு கரைத்து வார்க்கும் தோசை, அரிசிமாவு உப்புமா. சமீப காலத்தில் kayjee ரெகமண்ட் செய்த பாணி பூரி (pellets கிடைக்கின்றன - Amazon ) ஐந்தாறு எடுத்து மைக்ரோ வேவ் ஓவனில் பத்தே நொடியில் சிறு பூரிகள் பொரித்து - ஃபிரிஜ் ல இருக்கும் நேற்றைய ரசத்தை பாணி பூரிகளின் மீது ஊற்றி, 'ரசம் பூரி ' யாக சாப்பிட்டுவிடுவேன்!

✱ பசிச்சு சாப்பிட்டே நாளாகிறது! நேரத்துக்கு சாப்பிடுகிறோம்!

4. அம்மா கையால 'இதனைச்' சாப்பிடணும்னு நீங்க இன்னும் ஆசைப்படும் உணவு(கள்) என்ன?

# பருப்புத் துவையல், வாழைப்பூ வடகறி, வற்றல் குழம்பு புளியோதரை.

& அடை.

✱ மிளகு குழம்பு, அடை,

5. ஒரு வருடமா உருப்படியா திரைப்படம் எதுவும் வரலையே.. நீங்க படங்களை மிஸ் செய்தீர்களா?

# நான் திரைப்பட ஆர்வம் அதிகம் உள்ள நபர் அல்லன்.

& ஒரு வருடமாவா? எனக்குத் தெரிந்து பத்து வருடங்களாக உருப்படியான திரைப்படம் எதுவும் வரவில்லை!

## மின்நிலா 042

ஏஞ்சல் :

1, பச்சோந்திகள் ..எப்படி இருக்கும் வரையறுக்கவும் ? நான் கேட்டது மனித உருவில் உள்ள பச்சோந்திகளை பற்றி - இரண்டு கால் பச்சோந்திகளை கண்டுபிடிப்பது எப்படி ?

$ பச்சோந்தி வளர்க்கப் போகிறீர்களா?

# கண்டு பிடிக்க முடியுமானால் அது (மனிதப்)பச்சோந்திகளின் இயல்புக்கு முரணாகி விடும்.

& //இரண்டு கால் பச்சோந்திகளை கண்டுபிடிப்பது எப்படி ?// ரொம்ப சிம்பிள். கால்களை எண்ணிப்பாருங்க.

2, கொஞ்சம் வயதில் பெரியவர்களை எத்துறை சார்ந்திருப்பினும் அவர்கள் பொது வெளியில் விமரிசனத்துக்குள்ளாகும்போது மனது கஷ்டப்படுது இதன் காரணம் என்ன ? அவங்க தப்பே செய்திருக்கட்டுமே ஆனாலும் மனம் வருத்தப்படுவதன் காரணம் என்ன ?

$ எதையாவது கவலைப்படுதல் சிலர் சுபாவம். Anxiety reducing drugs உதவக்கூடும்.

# பிரமுகர்களை ஆராதிப்பது ஒரு மனப் பாங்கு. அது செயல்படாமல் இருப்பது அசாத்தியம்.

& யாரு அந்தப் பெரியவர்னு சொல்லிடுங்க.

3, ஒரு காலத்தில் சீரியஸாக எடுக்கப்படாத சின்ன விஷயங்கள் கூட இப்போதெல்லாம் சிலரால் ஊதி பெரிதாக்கப்படுகின்றன இதை பற்றி உங்கள் கருத்து ?

$ பின்னே அவர்கள் பேச்சை மற்றவர் கேட்கவேண்டுமே?

## மின்நிலா 042

# ஊடகம் வழியாக விரைவில் லட்சக்கணக்கான வர்களைச் சென்றடையும் வசதியைத் தந்த விஞ்ஞான வளர்ச்சிதான் காரணம். படிப்பவர் பக்குவம் பெறும் போது சரியாகிவிடும்.

4, உங்கள் வீட்டு கிச்சனில் எழுதப்படாத சட்டங்கள் எவை ?

$ நிறைய - ஒரு பதிவே எழுதலாம்
ஒவ்வொரு உணவுப் பொருளுக்கும் வேறு கரண்டிகள்.
டப்பாக்களை உடனுக்குடன் மூடவேண்டும்
பால் காய்ச்சும் பாத்திரத்தில் வேறு எதுவும் வைக்கக் கூடாது.

# எங்கள் கிச்சன் சர்வ சுதந்திர பூமி. எச்சிற்கலப்பு தவிர்த்து எல்லாம் சரியே.

& கிச்சனில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு இடம் வைத்திருக்கிறேன். அதது அதனதன் இடத்தில் இருக்கவேண்டும். எதையும் தேடி எடுக்கவேண்டிய நிலை இருக்கக்கூடாது.
கிச்சன் சிங்க்ல துலக்கப்படவேண்டிய பாத்திரம் எதுவும் pending இருக்கக் கூடாது. அப்போதைக்கப்போது கழுவி வைத்துவிட வேண்டும்.

5,// 100 வருஷம் சேர்ந்து இணைபிரியாம வாழணும் // இப்படி வாழணும்னா பிறந்த உடனேயே கல்யாணம் ஆகியிருக்கணுமே ? சும்மா ஜாலிக்காக கேட்டேன் .

$ 100 வருடம் என்பதும் ஒரு பேச்சுக்கு சொல்வது தானே?

# நூறாண்டு ஆனாலும் கூட, பிரிவின்றி என்று கொள்ளலாம்.

பானுமதி வெங்கடேஸ்வரன்:
கணிணி புழக்கத்திற்கு வந்த புதிதில் ஐ.சி.யூ.வில் வைப்பது போல அதை ஒரு குளிரூட்டப்பட்ட தனி அறையில் வைத்திருப்பார்கள்.,தூசு

**ஆகாது என்று நம் செருப்புகளை அறை வாசலில் விட்டு விட்டு பக்தியோடு உள்ளே செல்ல வேண்டும். ஆனால் மடிக்கணிணி வந்த பிறகு அத்தனை ஆசாரங்களும் அடித்துக் கொண்டு போய் விட்டதே? எப்படி?**

**$ PDP 11, IBM 1401 போன்ற கணினிகள் ferrite core memory டிரான்சிஸ்டர் core drivers எல்லாமாக நிறைய சக்தி வெப்பம் உண்டாக்குவதில் வீணானது. அதனால், குளிரூட்டப்பட்ட அறையில் வைக்கப்பட்டன.**
**Intel, amdhaal, VIC, Apple போன்ற கணினிகள் சற்று குறைந்த power இல் வேலை செய்தன.**
**Lap top, tab, android phone கள் வெகு குறைவான சக்தியில் நிறைய வேலை செய்யக்கூடியவை. எனவே குளிர் விட்டுப் போச்சு !**
**இப்பொழுது புரிந்திருக்கணுமே - ஆச்சார முறைகள் வேண்டாதவற்றை (தூசு) விலக்கி வைக்கவே வந்தன என்று!**

**# அதுதான் விஞ்ஞான வளர்ச்சி.**

**எங்கள் ப்ளாக் திங்கற கிழமைக்கு அப்பாதுரை ரெசிபி அனுப்பினால் எப்படி இருக்கும்?**

**$ திங்கள் கிழமைக்கு. தின்கிற மாதிரி ரெசிபி யாரனுப்பினால் என்ன?**

**# நான் அனுப்புவதைவிட நன்றாகவே இருக்கும் .**

**& அமானுஷ்யமாக இருக்குமோ? ரகுவிற்கு சமையல் தெரியுமா?**
**= = = = =**

**மின்நிலா சித்திரை சிறப்பிதழுக்காக - இந்தப் படத்தை மையமாக வைத்து ஏதேனும் எழுதி அனுப்புங்கள். உங்கள் படைப்புகளின் தலைப்பில் படம் 210303 என்று குறிப்பிடுங்கள்.**

## மின்நிலா 042



இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : **சுட்டி**

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக**

## எங்கள் ஆசிரியர்கள் மின்னூல்கள்





**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




\

LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




LINK :

INDIA : https://www.amazon.in/dp/B08CXBPPYN

US : https://www.amazon.com/dp/B08CXBPPYN

UK :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக

## கதம்பம் : ஸ்ரீராம்

**ஆசை இருக்கு புத்தகம் படிக்க... அதிருஷ்டம் இருக்கு படுத்துத் தூங்க!**

நாய் வாய் வைப்பது போல என்பார்கள். கண்ணெதிரே உள்ள பல்வகை உணவுகளிலும் நாய் ஒவ்வொன்றாக வாயை வைத்து ஒன்றையும் முழுசாக சாப்பிடாதாம்.

அதுபோல நான் ஒரே நேரத்தில் லைட்ரீடிங், கனமான ரீடிங், மீடியம் ரீடிங் என்றெல்லாம் மனதில் நினைத்து நால்வகைப் புத்தகங்களை வாசித்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு ஒற்றுமை, இரு புத்தகங்கள், அல்லது மூன்று புத்தகங்களில் சில விஷயங்கள் பொதுவான அம்சமாகி மூன்று விதமாக அலசப்பட்டிருந்தன.. எஸ்ரா எழுதிய 'எனது இந்தியா', மபொசி எழுதிய 'விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு', முகில் எழுதிய 'அகம் புறம் அந்தப்புரம்' ஆகியவை அந்த மூன்று நூல்கள். அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதும் சுவாரஸ்யம்.

நடுவில் மீள்வாசிப்பு வகையறாவாக கொஞ்சம் சுஜாதா, கொஞ்சம் சாண்டில்யன் என்று தொட்டுக்கொள்வேன்!

இதற்கு நடுவிலேயே புத்தக இடைக்காலக் கண்காட்சி வர, அதில் நான்கு வகை புத்தகங்கள் வாங்கி அதுவும் லிஸ்ட்டில் சேர்ந்தன. வாங்கிய அந்த லிஸ்ட் ஏற்கெனவே கொடுத்திருக்கிறேன்! ஏற்கெனவே நிறைய படிக்காத புத்தகங்கள் இருப்பதால் புத்தகக்கண்காட்சிப் பக்கம் போகக்கூடாது என்பதுதான் என் நிலை. எங்கே முடிகிறது! வாங்கி வாங்கி அடுக்குகிறேன்.

இந்த நேரத்தில் வீட்டில் புக்ரேக் வைக்கும் வேலைகள் தொடங்க, எல்லா வேலைகளிலுமே சுணக்கம் வந்தது. பொருள்களை இடம்

மாற்றி மாற்றி வைத்து, அவற்றை எங்கு வைத்தோம் என்பது மறந்து, தேடும்போது குழம்பி...

இது முக்கியமாக புத்தகங்களுக்கு பொருந்தும்.

புக்ரேக் அமைந்ததும் அனைத்துப் புத்தகங்களையும் தரம்பிரித்து அடுக்குவதில் நேரம் போனதோடல்லாமல் படித்துக் கொண்டிருந்த புத்தகங்கள், அடுத்துப் படிக்க என்று பார்த்து எடுத்து வைக்கப் பட்டிருந்த புத்தகங்கள் எல்லாம் ரேக் குழுமத்தில் சங்கமிக்க...

படித்துக் கொண்டிருந்த புத்தகங்களை எங்கு சேர்த்தோம் என்பது தேட வேண்டிய விஷயமாகிப் போனது.

இந்நேரத்திலா நிதியாண்டு முடிவு வரவேண்டும்? அலுவலகத்தில் கரும்புச்சாறு பிழியும் மெஷின் ஒன்றை எடுத்து வந்து வைத்து அதற்குள் என்னை நுழைத்துப் பிழிய முற்படுகிறார்கள்.

இடையில் கீதாக்கா சொல்லிச் சொல்லி எனக்குள் அவ்வப்போது ஆர்வத்தைத் தூண்டிய புத்தகம் ஒன்றையும் வாங்கி உள்ளே பத்திரமாக வைத்தாயிற்று. நீண்ட நாள் ஆசை, திட்டம். உடனே படிக்கப்போகிறோமோ இல்லையோ, ஆர்டர் தந்தால் உடனே அது கைக்கு கிடைத்திடவேண்டும். அதுவா... படாத பாடு படுத்தியது.... பணம் கட்டி பத்து நாட்கள் கழித்துதான் தேதி கொடுத்திருந்தது. தேதி வந்த சமயம் செய்தி வந்தது. "சேதாரம் காரணமாக விற்பனையாளருக்கே திருப்பி அனுப்பப் படுகிறது".

உடனே அமேசானுக்கு தொலைபேசி, அவர்களிடம் போராடி என்ன ஏது என்று நிலைமையைக் கேட்டு அடுத்த இரண்டு நாட்களில் புத்தகம் கைக்கு வரும்படி பார்த்துக் கொண்டாச்சு. ஆனால்... இதுவரை மேலே மூடி

இருக்கும் பிளாஸ்டிக் பேப்பரைக் கூட இன்னும் பிரித்துப் புரட்டிப் பார்க்கவில்லை. வேலை பிழிகிறது!

ஆசை இருக்கு புத்தகம் படிக்க... அதிருஷ்டம் இருக்கு படுத்துத் தூங்க!

ஆனால் இதன் இடையேயும் வேறொரு புத்தகம் வெகு சுவாரஸ்யமாக படித்துக் கொண்டும் வந்தேன்தான். அது அத்திமலை தேவன். அவ்வப்போது வந்த சந்தேகத்தை திரு நரசிம்மமாவிடமும் கேட்டுத் தெளிவுற்றேன்.

உறவினர் ஒருவர் மூலமாக படிக்கக் கிடைத்ததால் திருப்பிக் கொடுக்க வேண்டி முடிந்த வரை சீக்கிரம் படிக்க முயற்சி செய்தேன். இன்னும் பாக்கி இருக்கு!

இதுதான் இப்போதைய நிலை!

==========================

இந்த காபிரைட் இன்னும் செல்லுபடியாகுமா என்று தெரியவில்லை! துப்பு அறியும் நாவல்!

# ஜெயரங்கன்

## ஓர் துப்பு அறியும் இனிய தமிழ் நாவல்

இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" "மோஹன சுந்தரம்"
"ஆனந்த கிருஷ்ணன்" "இராஜேந்திரன்"
"வரதராஜம்" 1, 2-பாகங்கள்,

என்னும் நிகரில்லாத நாவல்களை எழுதிய

ஜெ. ஆர். ரங்கராஜு அவர்களால்
எழுதப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு

இந்நாவலின் சகல உரிமைகளையும் சட்டப்படி
ரிஜிஸ்டர் செய்திருப்பதால்
இந்நாவலை முழுமையாகவாவது,
பாகங்களாகவாவது, சுருக்கியாவது, மாற்றி
யாவது எழுதவும், அச்சடிக்கவும், வேறு பாஷைகளில்
மொழி பெயர்க்கவும், நாடக ரூபமாய் எழுதவும், நடிக்கவும்,
படம் பிடிக்கவும், கிராமபோன் பிளேட் எடுக்கவும்
கூடாதென்பதைத் தெரிவிக்கலாயிற்று.

ரங்கராஜு பிரதர்ஸ்

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை போஸ்டு, சென்னை.

1936


காபிரைட் ரிஜிஸ்டர்ட்

ரூ 1-8-0]

[தபால் கூலி பிரத்தியேகம்.


பார்றா...

'அன்னையர் தினம்' அறிவேன்... 'தந்தையர் தினம்' அறிவேன்... இன்னும் சில 'தினங்'களும் அறிவேன்.. இதுவுமா? இதை நான் இதுவரை அறியேன்!



## மின்நிலா 042

**பழைய கவிதை ஒன்று...**



Sriram Balasubramaniam
February 23, 2013 ·

குடும்பமிருக்கு குட்டியிருக்கு
நமக்கு ஒரு வீடும் இருக்கு
வீடு நிறையப் பிரச்சனையிருக்கு

நாடு இருக்கு
நாட்டில்
ஊழல் அரசியல் இருக்கு - அந்தப்
பாடு நமக்கு ஏதுக்கடி
குதம்பாய்
அரசியல் ஏதுக்கடி..

===============================================================================

**"எதை எழுதினாலும் அதை நாலு பேர் பாராட்டவாவது வேண்டும். அல்லது திட்டவாவது வேண்டும். இரண்டும் இல்லையென்றால் எழுதுவதைவிட எழுதாமல் இருப்பது நல்லது"**

**இதைச் சொல்லி இருப்பது யாராய் இருக்கும்? அமரர் கல்கி எழுத்தாளர் விந்தனுக்குச் சொன்னதாம் இது! அது மட்டுமல்ல... விந்தன் கதைகள் பற்றி கல்கியின் தமாஷான அபிப்ராயம் ஒன்று கீழே!**





''விந்தன் கதைகளைப் படிப்பதென்றால் எனக்கு மனத்திலே பயம் உண்டாகும்..... அவருடைய கதா பாத்திரங்கள் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் நாம்தான் காரணமோ என்று எண்ணி எண்ணித் தூக்கமில்லாமல் தவிக்க நேரும்....!''

=================

கொரோனா கட்டுப்பாடுகள் தளர்ந்து இப்போது பள்ளிகள் திறக்கப்படுகின்றன. ஆனால் பெற்றோர்கள் இன்றைய நிலையில் "அபபாடா... தொல்லை விட்டது" என்று மதன் ஜோக் மாதிரி ஆடிப் பாடுவார்களா, இல்லை பயத்துடன் பள்ளிக்கு அனுப்புவார்களா? எனக்கென்னவோ பள்ளிகள் திறக்கப்படுவதில்

விருப்பமில்லை. ஆனால் எத்தனை காலம் அபப்டியே போகும் என்பதும் சந்தேகம்தானே!



"நீங்க ரெண்டு பேரும் செய்யறது கொஞ்சங்கூட நல்லா இல்லே... நாளைக்கு என் ஸ்கூல் திறக்கறதுன்னா அதுக்கு இவ்வளவு சந்தோஷமா...?!"

## மின்நிலா 042

சென்ற வாரத்துக்கு முந்தைய வாரம் ஏதோ ஒரு பிரஸ்தாபத்தில் ரெட்டைவால் ரெங்குடு பற்றி பேச்சு வந்தததால் என் சேமிப்பில் தேடி எடுத்து பகிர்கிறேன். ஒரு ஜாலிதான்!









## மின்நிலா 042






"தனியா டூத் பேஸ்ட் எதுக்கும்மா தேய்ச்சுக்கணும்..?
வேணும்னா காபியிலே போட்டுக்குடுத்துடேன்... ப்ளீஸ்!"

## மின்நிலா 042




இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : [சுட்டி]

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக]

# படம், பாட்டு, தகவல் & காணொளி :: ஸ்ரீராம்

## உன் பேரச் சொல்லி பாடி வச்சா ஊறுதம்மா தேனே...

படம் வெளியான ஆண்டு 1989. ராமராஜன் கௌதமி நடித்த திரைப்படம். பெயர் பொங்கி வரும் காவேரி.

பாடல்கள் கங்கை அமரன். பிறைசூடன். இசை இளையராஜா.

அருண்மொழியும் சித்ராவும் பாடியிருக்கும் பாடல். அருண்மொழிக்கு அழகான குரல். அவர் பாடிய எபெரும்பாலான பாடல்கள் ஹிட். ஆனால் அவர் பாடுவதைவிட புல்லாங்குழல் இசைப்பதையே விரும்புபவர். இளையராஜா ட்ரூப்பில் பல வருடங்களாய் இருப்பவர். இளையராஜாவின் இசையில் பல பாடல்களிலும் வரும் வரும் புல்லாங்குழல் இசைக்கு சொந்தக்காரர் இவர்தான்.

ராமராஜன் பாடல்கள் பெரும்பாலும் இளையராஜா இசையில் பிரபலம் அடைந்தவை. மதுரையில் ஜெயவிலாஸ் பஸ்ஸிலும் பி வி ஆர் பஸ்ஸிலும் அலுவலகம் சென்று வரும்போது தரமான ஸ்பீக்கர் பெட்டிகள் வைத்து அலறலாக இல்லாமல் அழகாக பாடல்கள் ஒலிபரப்பபப்டும். அப்போது கேட்டு மனதுக்குள் நுழைந்த பாடல்கள் பல. அதில் இந்தப் பாடலும் ஒன்று.

கிராமத்துச் சூழ்நிலையில் மென்மையான இசையுடன் இனிமையான பாடல். அழகான மனதில் பதியும் குரல்கள்.

**வெள்ளி கொலுசு மணி வேலான கண்ணு மணி**
**வெள்ளி கொலுசு மணி வேலான கண்ணு மணி**
**சொல்லி இழுத்ததென்ன தூங்காம செஞ்சதென்ன**

**பாடாத ராகம் சொல்லி பாட்டு படிச்சதென்ன**
**கூடாம கூட வச்சி சேர்த்ததென்ன**

## மின்நிலா 042

வெள்ளி கொலுசு மணி வேலான கண்ணு மணி
சொல்லி இழுத்ததென்ன தூங்காம செஞ்ததென்ன

துள்ளிக் குதிக்கும் பொன்னி நதிதான்
மெல்ல மெல்ல வந்து அணைக்கும்
மஞ்ச குளிக்கும் வஞ்சி மனச
கொஞ்சிக் கொஞ்சி அரவணைக்கும்

பொன்னி நதி போல நானும் உன்ன
பொத்திப் பொத்தி எடுக்கட்டுமா
கண்ணு வழி பேசும் சின்னப் பொண்ண
கட்டிக் கட்டி கொடுக்கட்டுமா

காத்து காத்து நானும் பூத்து பூத்து போனேன்
சேர்ந்து பாடும் போது தேரில் ஏறலானேன்

உன் பேரச் சொல்லி பாடி வச்சா ஊறுதம்மா தேனே

வெள்ளி கொலுசு மணி வேலான கண்ணு மணி
சொல்லி இழுத்ததென்ன தூங்காம செஞ்சதென்ன

பாடாத ராகம் சொல்லி பாட்டு படிச்சதென்ன
கூடாம கூட வச்சி சேர்த்ததென்ன

கண்ணத் தொறந்தேன்
நெஞ்சில் விழுந்தே
உள்ளுக்குள்ள இன்ப சுகந்தான்
எண்ணம் முழுதும் பொங்கி வழியும்
வாங்கினது நல்ல வரந்தான்

கண்ண தொறக்காம மூடிக்கிட்டேன்
நெஞ்சில் வச்சு அணைச்சுபுட்டேன்
பூட்டு ஒண்ண போட்டு பூட்டிபுட்டேன்
சாவியத்தான் தொலைச்சுபுட்டேன்

## மின்நிலா 042

உள்ள போயி நீதான் பாடுகின்ற பாட்டு
மெழுகு போல நானும் உருகி போனேன் கேட்டு

காலமெல்லாம் கேட்டிடத்தான்
காத்திருக்கேன் பாட்டு

வெள்ளி கொலுசு மணி வேலான கண்ணு மணி
வெள்ளி கொலுசு மணி வேலான கண்ணு மணி
சொல்லி இழுத்ததென்ன தூங்காம செஞ்சதென்ன

பாடாத ராகம் சொல்லி பாட்டு படிச்சதென்ன
கூடாம கூட வச்சி சேர்த்ததென்ன

வெள்ளி கொலுசு மணி வேலான கண்ணு மணி
சொல்லி இழுத்ததென்ன தூங்காம செஞ்சதென்ன

YOUTUBE LINK

= = = =

**என் தெரிவு (KGG)**

**கீழே உள்ள பாடல் சரண வரிகளை எழுதியுள்ளவர், என்னுடைய நண்பர், என்னுடன் அசோக் லேலண்டில் பணி புரிந்தவர், பாலா சிவசங்கரன்.**

**முன்னொரு காலத்தில் வலைப்பூ பக்கங்களும் எழுதிக் கொண்டிருந்தார்.**

>>>> YOUTUBE LINK

**= = = =**

## மின்நிலா 042

**சில கருத்துரைகள், பதில்கள் -**

**நெல்லைத்தமிழன்:**
**இரண்டாவது பாடல் கேட்க நல்லாருக்கு... தேடித் தேடி என் பெண்மை இழந்தேன் என்றால் என்ன அர்த்தம்?**

**பதில்கள்:**

**கௌதமன் :**
**என் நண்பரை வாட்ஸ் அப் மூலமாக கேட்டிருக்கிறேன்.**

**வல்லிசிம்ஹன்:**
**எல்லா வரிகளும் தனியாகப் பார்க்கையில்**
**இருக்கிற அழகை விடப் பாட்டாகக் கேட்கும்போது**
**மிக மிக இனிமை - நன்றி ஸ்ரீராம் ,.இதமான பாடல்.**

**கௌதமன் ஜி பாடலும் நன்றாக இருக்கிறது.**
**இந்தக் காலத்துப் பாட்டு. இது வரை கேட்டதில்லை.**
**@ நெல்லைத்தமிழன்**

**பெண்மையின் குணம் தேடிப்போவது கிடையாது.**
**இவள் தேடியதால் என் பெண்ணுக்கான இலக்கணத்தையே' தொலைத்தேன் என்கிறாளோ?**

**பாலா சிவசங்கரன் :**
**நெல்லைத்தமிழன் அவர்களே, வல்லிசிம்ஹன் கூறியுள்ளது போல், தேடுதல் பெண்மையின் குணமல்ல என்ற பொருளிலேயே இவ்வரியை எழுதினேன்.**

**இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி**

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக**

# நல்ல செய்திகள்

மைசூர் கலெக்டராக இருப்பவர் ரோஹினி சிந்தூரி. வயது 36. துணிச்சலாக செயல்பட்டு பெண் சிங்கம் என பேர் எடுத்தவர். பல டிரான்ஸ்ஃபர்களை பார்த்த பிறகும் நேர்மையான ஐ.ஏ. எஸ். ஆக செயல்படுபவர். ஒரு வாரத்துக்கு முன், குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருடன் குடகு மற்றும் சில சுற்றுலா ஸ்தலங்களுக்கு காரில் சென்றார். போன இடத்தில் டயர் பஞ்சர் ஆனது. அந்நேரம் பார்த்து கணவரும் இல்லை. ரோஹினி சற்றும் யோசிக்கவில்லை; ஜாக்கி உதவியுடன் டயரை கழற்றி விட்டு, ஸ்டெப்னி டயரை மாட்டினார்.

YOUTUBE LINK

= = = =

மஞ்சள் மகிமை !

மஞ்சளில் எவ்வளவு 'குர்குமின்' உள்ளது?

நம்முடைய பாரம்பரிய வழக்கத்தில், மங்கலப் பொருளாகவும், கிருமி நாசினியாகவும் மஞ்சள் பயன்படுத்தப்படுகிறது. புதிதாக வைரஸ் தொற்று ஏற்பட்டவுடன், வைரசை அழிக்கும் திறன் மஞ்சளுக்கு உள்ளதா என்று ஆராயப்பட்டது.கொரோனா வைரஸ், நுரையீரலை தாக்கும் போது, சுவாசப் பைகளில் வெடிப்பை ஏற்படுத்தி, ரத்தக் கட்டியை உண்டாக்கி, ரத்தக் கசிவை ஏற்படுத்துகிறது. இதற்கு காரணமே நம்முடைய நோய் எதிர்ப்பு சக்தி தான் என்றும் சில ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் நுரையீரல் இறுகி, சுவாசிக்க இயலாமல் இறப்பு நேரிடுகிறது. இதற்கு, 'சைட்டோகைய்ன் ஸ்டார்ம்' என்று பெயர். இந்த நிகழ்வு நடக்காமல், 'குர்குமின்' தடுப்பதாக, ஆரம்ப கட்ட ஆய்வு கள் தெரிவிக்கின்றன.அவசியம் இல்லை'ஜிகா, சார்ஸ், ஹெபடைடிஸ்' வைரஸ் கிருமிகள் பரவிய போது, மஞ்சள் நல்ல பலனை கொடுத்து

உள்ளது; அதனால் தான், கொரோனா வைரசுக்கும் ஆய்வு செய்யப்படுகிறது.வேக வைத்து, காய வைத்து, பொடி செய்த மஞ்சளை விடவும், பச்சை மஞ்சள் கிழங்கில் தான் அதிக அளவு குர்குமின் உள்ளது.

ஒரு பச்சை மஞ்சள் கிழங்கில், 2 - 9 சதவீதம் குர்குமின் உள்ளது.மஞ்சளை தனியாக சாப்பிடுவதை விட, மிளகுடன் சேர்த்து பயன்படுத்தினால், அதில் உள்ள குர்குமினை முழுமையாக உடல் உறிஞ்சும். சித்த மருத்துவத்தில், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் சேர்த்தே பயன்படுத்தி உள்ளனர். குர்குமின் முழுமையாக உடலில் சேர, மிளகு மற்றும் தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து சாப்பிடலாம்.தினமும், 30 - 75 கிராம் மஞ்சள் சாப்பிட்டால், 2 - 9 சதவீதம் குர்குமின் கிடைக்கும்.மேலை நாடுகளில் மஞ்சள் விளைச்சல் கிடையாது என்பதால், இதில் உள்ள குர்குமினை தனியே பிரித்து, மாத்திரை வடிவில் பயன்படுத்துகின்றனர்; நமக்கு அப்படி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.நல்ல பலன்சித்த மருத்துவத்தில், நுரையீரல் பிரச்னை, சளி, ஆஸ்துமா, இருமல் இருந்தால், மஞ்சள், மிளகு பொடியை பாலுடன் சேர்த்து, குடிக்கச் சொல்வோம்.

சிறிது மஞ்சளுடன் மிளகு, தேங்காய் எண்ணெய் சேர்த்து குழைத்து, உணவிற்கு பின் சாப்பிட்டு வந்தால், மூட்டுகளில் ஏற்படும் வலி, வீக்கம் நீங்கும். தோல் வியாதி இருந்தால், மஞ்சளுடன் குப்பைமேனி இலை சேர்த்து அரைத்து, பிரச்னை உள்ள இடத்தில் பூசினால், நல்ல பலனை தரும்.தும்மல், மூக்கடைப்பிற்கு மஞ்சளை தீயில் சுட்டு, அதன் வாசனையை முகர்ந்தால், சரியாவதோடு, ஒற்றைத் தலைவலி குறையும்.மஞ்சளை தேய்த்து குளிப்பதால் தோல் ஆரோக்கியமாக இருக்கும். பெண்கள் தொடர்ந்து மஞ்சள் சாப்பிடும் போது, மாதவிடாய் பிரச்னைகள், நீர்க்கட்டி வராது. இப்பிரச்னைகள் இருந்தால், விடாமல் மஞ்சளை சாப்பிட்டால், கோளாறு சரியாகி, சீரற்ற மாதவிடாய் சரியாகும்; ஹார்மோன் செயல்பாடும் சீராக அமையும்.




டாக்டர் ஜி.சதீஸ் குமார்,
சித்த மருத்துவர்,
சென்னை.
தொடர்பு எண் : 98400 25847
= = = = =

**18 மணி நேரத்தில் 25 கி.மீ சாலை: நெடுஞ்சாலை ஆணையம் உலக சாதனை.**

புதுடில்லி: தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் சமீபத்தில் மஹாராஷ்டிராவின் சோலாப்பூர், கர்நாடகாவின் விஜய்புரா இடையே செல்லும் என்.எச்., 52-ல் 25.54 கிலோ மீட்டருக்கு ஒற்றை வழி சாலை அமைத்து உலக சாதனை படைத்துள்ளது.



இந்த சாலை ஆனது அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட பெங்களூரு - சித்ரதுர்கா - விஜய்புரா - சோலாபூர் - அவுரங்காபாத் - இந்தூர் - குவாலியர் சாலையின் ஒரு பகுதியாகும். அதில் தற்போது விஜய்புரா - சோலாபூர் இடையே 110 கி.மீக்கு நான்கு வழிச்சாலை அமைத்து வருகின்றனர். அக்டோபர் 2021-ல் இச்சாலைப் பணிகளை முடிக்க திட்டமிட்டுள்ளனர். அதில் உலக சாதனை முயற்சியாக 25.54 கி.மீ சாலையை 500 ஊழியர்கள் 18 மணி நேரத்தில் அமைத்துள்ளனர்.

இத்தகவலை நெடுஞ்சாலைகள் துறைக்கான மத்திய அமைச்சர் கட்கரி உறுதிப்படுத்தினார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட டுவிட்டர் பதிவில், “இந்த விரைவுப் பணி லிம்கா சாதனை புத்தகத்தில் சேர்க்கப்பட உள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மற்றும் ஒப்பந்த நிறுவனத்தின் பணியாளர்கள், திட்ட இயக்குனர்கள், அதிகாரிகளுக்கு பாராட்டுக்கள்.” என கூறியுள்ளார்.

## மின்நிலா 042

கர்நாடக துணை முதல்வர் கோவிந்த் கர்ஜோலும் நெடுஞ்சாலை ஆணையத்தின் பணியை பாராட்டியுள்ளார். அவர் தனது அறிக்கையில் “இந்த அரிய சாதனை தற்போது செயல்பாட்டில் உள்ள திட்டங்களிலும், வரவிருக்கும் திட்டங்களிலும் பெஞ்ச்மார்க்காக அமையும். இந்த நெடுஞ்சாலை தென் இந்தியாவை வட இந்தியாவுடன் இணைக்கிறது. வடக்கு - தெற்குக்கு இது ஒரு மாற்று பாதையாக அமையும். இச்சாலை பயண நேரம், வாகனங்கள் இயக்க செலவை வெகுவாக குறைக்கும். மேலும் மஹா., கர்நாடக மாநிலங்களின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு உதவும்.” என கூறினார்.

= = = =

எழுத்தாளர் R இந்துமதி அவர்களின் முகநூல் பதிவு :

சற்று முன் முகநூலில் ஒரு பதிவு கண்டேன். " மன அழுத்தமா..? தொடர்பு கொள்ளவும். இலவச ஆலோசனை "

ஆண்களுக்கு ஒரு நம்பர். பெண்களுக்கு ஒரு நம்பர் தனித்தனியாகக் கொடுக்கப் பட்டிருந்தது. தொடர்பு கொண்டு பேசினேன். என் பெயர் கொண்ட சைக்காலஜிஸ்ட் பேசினார். பாரத் சேவா சங்க அமைப்பு என்றார், நம்பிக்கை ஏற்பட்டது.

" இது நிச்சயமாகப் பல பெண்களுக்கு உதவியாக இருக்கும். எத்தனையோ பெண்கள் வெளியில் சொல்ல முடியாத பிரச்சினைகளில் சிக்கி மன அழுத்தத்தில் தவிக்கிறார்கள். யாரிடம் சொன்னாலும் சங்கடமே. சிக்கலே. அது எந்தெந்த உருவில் விஸ்வரூபம் எடுக்குமோ என்ற பயத்திலும் அதைத் தங்களுக்கு சாதகமாக உபயோகப் படுத்துவார்களோ என்ற நம்பிக்கை இன்மை காரணமாகவும் உள்ளுக்குள் புழுங்கித் தவிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சிறந்த ஆறுதலாகவும் வடிகாலாகவும் இருக்கும். தகுந்த மனநல நிபுணர்களை அனுப்பி கவுன்சிலிங் கொடுப்பதாகவும் சொன்னார்கள். தற்போதைய முக்கியத் தேவை எனவும் பட்டது. தேவைப் படுபவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

**பெண்கள் மன அழுத்தம் போக்க தொடர்பு கொள்ள கைபேசி எண்:- 7305087895.**

= = = =

**பெண் குழந்தை பிறப்பை கொண்டாடும் கிராமம்.**

தெலுங்கானா கிராமம் ஒன்றில், பெண் குழந்தைகள் பிறந்தால், பெற்றோருக்கு ஊக்கத்தொகை வழங்கி, ஊர்வலம் நடத்தி, இனிப்பு வழங்கி விமரிசையாக கொண்டாடும் வழக்கம் உள்ளது.

தெலுங்கானா மாநிலத்தின், சங்கா ரெட்டி மாவட்டத்தில், ஹரிதாஸ்பூர் என்ற கிராமம் உள்ளது. இங்கு, 300 குடும்பங்கள் வசிக்கின்றன. மொத்த மக்கள் தொகை, 1,200க்கு குறைவாகவே உள்ளது. இந்த கிராமத்தை சேர்ந்தவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தால், அதை மிக விமரிசையாக கொண்டாடுவதை கிராம பஞ்சாயத்து வழக்கமாக வைத்துள்ளது.

கிராம பஞ்சாயத்து கட்டடம், வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்படுகின்றன. பெண் குழந்தையின் பெற்றோருக்கு, சிறிய ஊக்கத்தொகை பரிசாக வழங்கப்படுகிறது.கிராம மக்கள் ஒன்றிணைந்து, மேள தாளங்களுடன் நடனமாடி, கிராமத்தை ஊர்வலமாக சுற்றி வருகின்றனர்; இனிப்பு வழங்கப்படுகிறது.பிறந்த பெண் குழந்தையின் பெயரில், 1,000 ரூபாய் வங்கியில், 'டிபாசிட்' செய்யப்படுகிறது.

'பெண் குழந்தைகள், கிராமத்துக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கின்றனர். அவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்யவே, இந்த வழக்கத்தை தொடர்கிறோம்' என, ஹரிதாஸ்பூர் கிராம பஞ்சாயத்து செயலர் ரோஹித் குல்கர்னி தெரிவித்தார்.

= = = =

## மின்நிலா 042

**தென்னையின் ஊடே வாழை, கோகோ, கொய்யா மரங்கள்.**

மதுரை டோக்நகரைச் சேர்ந்த விவசாயி இருளாண்டி ராஜா தென்னையில் ஊடுபயிராக வாழை, கோகோ, கொய்யா, பப்பாளி, எலுமிச்சை மரங்கள் நட்டு லாபம் ஈட்டி வருகிறார்.

ஊடுபயிர் விவசாயம் குறித்து அவர் கூறியதாவது: சோழவந்தானில் பத்து ஏக்கரில் தென்னை மற்றும் வாழை மட்டுமே நடவு செய்துள்ளேன். இங்கே தண்ணீர் பிரச்னை குறைவு தான். 700 மரங்கள் வளர்கின்றன. 2 கிணறுகள் மூலம் பாசனமும், கண்மாய் மூலம் கிணற்றுக்கு தண்ணீரும் கிடைக்கிறது. 7 ஏக்கரில் நெட்டை ரகமும், மீதி குட்டைரக தென்னையும் வளர்கின்றன. 50 நாட்களுக்கு ஒரு முறை காய்கள் எடுத்து விடுவேன். இளநீருக்காக வெட்டி விற்பதில்லை. முற்றிய காயாகவே சந்தையில் விற்கிறேன்.டோக்நகரில் மூன்றரை ஏக்கரில் 300 தென்னை மரங்கள் இருந்தன. தண்ணீரின்றி 200 மரங்கள் பட்டுப் போயின. பட்டுப்போன மரத்தையொட்டி புதிதாக கன்று நட்டு வருகிறேன். தென்னைக்கு ஊடாக வாழை, கொய்யா, பப்பாளி, கோகோ, எலுமிச்சை மரங்கள் வளர்க்கிறேன்.

சில இடங்களில் அடர் நடவு முறையில் வாழைக்கன்றுகளை நெருக்கமாக நட்டுள்ளேன். முதலில் வளரும் வாழை பெரிதாகும். பக்க வாழைகளை இலைகளாக வெட்டி விற்பனை செய்கிறேன். கோகோ பழங்கள் சந்தையில் விற்கிறேன். அவற்றை பதப்படுத்தும் நுட்பம் தெரியவில்லை. கொய்யா, பப்பாளிக்கு உள்ளூர் சந்தையே போதும். ஆங்காங்கே பீர்க்கு, புடலை, காய்கறி பயிர் செய்து வீட்டு தேவைக்கு பூர்த்தி செய்கிறேன்.ஊடுபயிர் மூலம் ஈட்டும் வருமானம் தோட்ட பராமரிப்புக்கு சரியாகிறது. தென்னங்காய்கள் மூலம் லாபம் கிடைக்கிறது என்றார்.

இவரிடம் பேச: 86106 66411
-எம்.எம்.ஜெயலெட்சுமி, மதுரை.

அசையாமல் மாறும் லென்ஸ்.

பொதுவாக, ஒளிப்பதிவு கருவிகளில், ஜூம் லென்ஸ் எனப்படும், வெகு தொலைவு காட்சி ஆடிகள் மிகவும் சிக்கலானவை. இந்த ஆடியை திருகி, முன், பின்னாக நகர்த்தினால்தான் படங்களின் துல்லியத்தை, காட்சியின் விரிவை கூட்டவோ, குறைக்கவோ முடியும்.ஆனால், அமெரிக்காவிலுள்ள மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிலைய - எம்.ஐ.டி., விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள லென்ஸ் வித்தியாசமானது.

பழைய 'சிடி' மற்றும் 'டிவிடி' தயாரிக்க பயன்படும் ஜெர்மானியம், ஆன்டிமனி, டெலுரியம் ஆகியவற்றுடன், புதிதாக செலினியம் என்ற வேதிப் பொருளையும் கலந்து, புதிய ஆடியை, எம்.ஐ.டி., விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

இந்த ஆடி மீது வெப்பத்தை செலுத்தினால், அதை அசைக்காமலேயே, காட்சியில் மாற்றங்களை கொண்டுவர முடியும். அதே சமயம், ஆடியின் கண்ணாடித் தன்மையில், எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆடியின் குவியப் புள்ளி மட்டும் வெப்பத்திற்கேற்ப மாறுகிறது. இது ஜூம் லென்சின் வேலையை கச்சிதமாக செய்யப் போதுமானது.



இந்நுட்பம் ட்ரோன்கள், செல்போன்கள், இரவு பார்வை கருவிகள் போன்றவற்றுக்கான, சிறிய ஜூம் லென்சுகளை தயாரிக்க வருங்காலத்தில் பயன்படும். இக்கண்டுபிடிப்பை பற்றிய ஆய்வுக் கட்டுரை, 'நேச்சர் கம்யூனிகேசன்ஸ்' இதழில் வெளிவந்துஉள்ளது.
= = = =

கனியை அளக்கும் கருவி.

கிடங்கில் வைத்துள்ள காய்கள், கனிந்துள்ளனவா? இதை கண்டறிய மனிதக் கண்கள், மூக்கு, கைகள் தான் இன்னமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த, 21ம் நூற்றாண்டில் கூட, ஒவ்வொரு சுளையையும், ஒவ்வொரு குலையையும், பழுத்திருக்கின்றனவா என்று சோதிக்க, நம்பகமான தொழில்நுட்பங்கள், இன்னும் பரவலாகவில்லை.அண்மையில் தான், ஜப்பானைச் சேர்ந்த ஆய்வாளர்கள், இதற்கு தீர்வினை கண்டறிந்துள்ளனர். மாங்காய், வாழை போன்ற கனிகளை, கையால் தொடாமல், லேசர் மற்றும் பிளாஸ்மா அதிர்வலைகள் மூலம், துல்லியமாக பழுத்திருப்பதை கண்டறிய முடியும் என, அவர்கள் நிரூபித்துள்ளனர்.

மாம்பழத்தின் மீது, அதிதிறன் லேசர் கதிரை பாய்ச்சினால், தோலுக்கு அடியில் பிளாஸ்மா குமிழ்கள் உருவாகும். அக்குமிழ்களின் மீது, 'லேசர் டோப்ளர் வைப்ரோமீட்டர்' கருவியின் அதிர்வலைகள் பட்டுத் திரும்பும்போது, பழத்தின் காய் மற்றும் கனிந்த தன்மையை தெரிந்துகொள்ள முடியும்.

ஜப்பான் விஞ்ஞானிகளுக்கு, இது ஆரம்ப கட்ட வெற்றி தான். மாங்கனி, உள்ளே கெட்டிருந்தாலோ, வண்டு துளைத்திருந்தாலோ, லேசர் கதிர்களின் கணிப்பு தவறாகும் வாய்ப்பு உள்ளது. எனவே, இக்கருவியின் துல்லியத்தை மேலும் கூட்ட, ஆய்வுகள் தொடர்கின்றன.

= = = =

## மின்நிலா 042

**தரை மட்டத்திற்கு சென்ற வீடு 5 அடி உயரம் தூக்கி நிறுத்தம்.**

**கடலூர் :கடலூாரில், சாலை மட்டத்தைவிட, தாழ்வாக உள்ள வீட்டை, 5 அடி உயரத்திற்கு, 'ஜாக்கி' உதவியுடன் தூக்கி நிறுத்தும் பணி நடக்கிறது.**

**கடலூர், மேற்கு வேணுகோபாலபுரத்தில் வசிப்பவர் குருநாதன், 65; அரிசி வியாபாரி. இவரது கான்கிரீட் வீடு, தரைத்தளம், 1,700 சதுர அடி, முதல் தளம், 900 சதுர அடி என, மொத்தம், 2,600 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது.கிட்டத்தட்ட, 35 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இந்த வீடு, அவ்வப்போது சாலைகள் போடப்பட்டதில், 2 அடி பள்ளத்திற்கு போனது. இதனால், மழைக்காலத்தில் வீட்டிற்குள் தண்ணீர் புகுந்தது.**

**வீட்டை இடிக்காமல் மேலே உயர்த்த முடிவு செய்த குருநாதன், சென்னையைச் சேர்ந்த தனியார் கட்டுமான நிறுவனத்தை அணுகினார். தனியார் நிறுவன ஊழியர்கள், 25க்கும் மேற்பட்டோர், 120 ஜாக்கிகளின் உதவியுடன், வீட்டை, 5 அடி உயர்த்தி, இரும்பு தண்டவாளத்தின் மீது நிறுத்தியுள்ளனர். இதை, அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.**

**குருநாதன் கூறுகையில், "12 லட்சம் ரூபாய் செலவில், வீட்டை உயர்த்தும் பணி நடக்கிறது. தொழிலாளர்கள் இங்கு தங்கி, ஒரு மாதமாக பணியில் ஈடுபடுகின்றனர். இரண்டு மாதங்களில், பணிகள் முடிந்து விடும்," என்றார்.**



**இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி**

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக

## பேசும் படங்கள் :: kayjees

## ஸ்ரீரங்கப் பட்டணத்தைப் பார்த்திருக்கியா ... நீ !

ஸ்ரீரங்கப்பட்டணம் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் மாண்டியா மாவட்டத்தில் அமைந்துள்ள நகராகும். மைசூர் நகருக்கு அருகில் அமைந்த இந்நகரம் சமய, பண்பாட்டு, வரலாற்று சிறப்பு மிக்க இடமாகும்.

மைசூரிலிருந்து 13 கிமீ தொலைவில் இந்நகரம் உள்ளது. கிருஷ்ணராஜ சாகர் அணைக்கட்டிலிருந்து வெளிவரும் காவிரி 8 கிமீ பயணித்து உண்டாக்கிய தீவில் இந்நகரம் உள்ளதால் இதை தீவு நகரம் எனலாம். காவிரியில் அமைந்த தீவுகளிலேயே இது தான் பெரிய தீவு ஆகும். மைசூரை பெங்களூருடன் இணைக்கும் தொடர் வண்டிப்பாதையும் சாலையும் இதன் ஊடாக செல்லுகின்றன. (நன்றி: விக்கிப்பீடியா)

இருநூற்று நாற்பது வருடங்களுக்கு முந்தைய நகரம் - - -



## மின்நிலா 042

**இதை பழைய பதிவில் பார்த்திருக்கிறோமோ ?**





# மின்நிலா 042

**போர்டுல யாரு ஓட்டை போட்டது?**



**அந்தக் காரைப் பின் தொடர்வோமா ?**



**ஆனால் ஒருவர் முந்திச் செல்கிறார்!**



**ஊஹூம் - - - வழி கிடைக்கவில்லை!**



## மின்நிலா 042

**199 ரூபாய்க்கு என்ன கிடைக்கும்? ஜாங்கிரியா? தமிழ்ல சொல்லுங்கப்பா !**




**ஓ ! டாடா ஸ்கை !! ஓகே ஆசீர்வாதம்!**



# மின்நிலா 042

**பிருந்தாவனத் தோட்டம் வரவேற்கிறது!**




**அட! கார் வரிசை இங்கும் தொடர்கிறதே!**



**மறுபடியும் ஜாங்கிரியா!**




**பாலத்தின் தடுப்பு சுவரில் ஓட்டைகள் இல்லாதிருந்தால் அங்கேயும் விளம்பரம் எழுதியிருப்பார்கள் !**



**தங்குமிடம் ?**



**ஆ! orphanage !!**



## மின்நிலா 042

**கார்களும், மின்மாற்றியும், பீரங்கி வண்டியும் - என்ன combo !**





## மின்நிலா 042

**என்ன கோயில்?**



**அது யாரு?**



**ஒத்தைக் கடை!**



**கோயில் வேலி !**



## மின்நிலா 042

**எங்கு செல்கிறார்கள்?**



**இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி**

**உங்களைப்பற்றி நீங்கள்**

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.**

**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**

engalblog@gmail.com

**என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**

**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**

**இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,**

engalblog@gmail.com

**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !**

## தலைவா !



தொண்டர் : " தலைவரே ! நம்ம கட்சிக்கு எல்லா தொகுதியிலும் 0 வோட்டு கிடைச்சிருக்கு!"

தலைவர் : " ஏன்? "

தொண்டர் : " நீங்க மேடையில பெயரைத் திருப்பிப் போடுவதைப் பற்றி பேசின நாளிலிருந்து நம்ம தொண்டர்களுக்கு திருப்பிப் போடுகிற பைத்தியம் பிடிச்சு - எல்லோரும் வாக்கு எந்திரத்தைத் திருப்பிப் போட்டு அமுக்கிட்டாங்க! - ஒரு வோட்டு கூட நம் கட்சிக்குப் பதிவாகவில்லை! "

